# பிறைம் லாண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பி.எல்.சி யின் அனைத்து பங்குதாரர்களுக்குமான அறிவித்தல்

---

நிறுவனத்தின் 18வது ஆண்டுப்பொதுக்கூட்டம் ஆனி மாதம் 30ம் திகதி 2023 மாலை 2.30 மணிக்கு நிகழ்நிலை சந்திப்பு தளத்தின் மூலம் நடைபெறும் என்பதற்கான அறிவித்தல்

---

## ஆண்டு பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பு

பிறைம் லாண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பி.எல்.சி யின் பங்குதாரர்களின் 18வது வருடாந்த பொதுக்கூட்டம் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதி மாலை 2.30 மணிக்கு நிகழ்நிலை சந்திப்பு தளத்தின் மூலம் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

(1) சந்திப்பு அறிவிப்பு

(2) 2023 பங்குனி 31 ல் முடிவடைந்த கணக்காண்டிற்கான இயக்குனர்களின் அறிக்கை, கணக்கு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கையைப் பெற்று பரிசீலித்தல்.

(3) 2022/23 நிதியாண்டின் இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டு வழங்கப்படும் இடைக்கால பங்கிலாபமான ரூபா 1/- னை அந்த நிதியாண்டிற்கான இறுதிப்பங்கிலாபமாக தீர்மானித்தல்.

(4) கூட்டு நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைச்சட்டத்தின் கீழ் சுழற்சி முறையில் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெறும் திரு. தம்மிக்க கலபுகே அவர்களை, தகுதியுடையவராக இருப்பதால், மீள தெரிவு செய்தல்.

(5) கூட்டு நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைச்சட்டத்தின் கீழ் சுழற்சி முறையில் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெறும் திரு. மகிந்த பெரேரா அவர்களை, தகுதியுடையவராக இருப்பதால், மீள தெரிவு செய்தல்.

(6) மெசர்ஸ் BDO Partners பட்டயக் கணக்காளர்களை அடுத்த ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமித்து, அவர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க இயக்குனர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.

(7) 2023/24 ஆம் ஆண்டிற்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நன்கொடைகளுக்கான பங்களிப்புக்களை தீர்மானிக்க இயக்குனர்கள் குழுவிற்கு அதிகாரமளித்தல்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்துவரும் அச்சிடுவதற்கான செலவீனங்களை கருத்தில் கொண்டு வருடாந்த அறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியை எழுத்துமூலமாக கோரும் பங்குதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து எட்டு (8) சந்தை நாட்களுக்குள் வழங்கப்படும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எவ்வாறாயினும் பங்குதாரர்களின் உரிமையை பாதுகாத்து நிலைநிறுத்துவதோடு எவ்வித பாராபட்சமும் இன்றி வருடாந்த அறிக்கையை அணுகவும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்குமான அறிவிப்புக்கள் CSE இணையதளத்திலும் *(https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=PLR.N0000)* மற்றும் நிறுவன இணையதளத்திலும் *(https://www.primeresidencies.lk/investor-relation)* பதிவேற்றப்பட்டுள்ளது. எனவே கூட்டத்திற்கான அறிவிப்பு, அது தொடர்பான ஆவணங்கள் உட்பட "நிகழ்நிலை சந்திப்பு தளத்தின் மூலம் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிகாட்டுதல்கள்" மற்றும் "பங்குதாரர் விபரங்களை பதிவு செய்தல் - நிகழ்நிலை பங்கேற்பு – 2023" போன்ற ஆவணங்களை மேற்குறிப்பிட்ட இணையதளத்தினூடாக பார்வையிடலாம்.

பிறைம் லாண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பி.எல்.சி யின்
இயக்குனர் குழுவின் உத்தரவின்படி

பெலே கன்சல்டிங் (பிரைவட்) லிமிடெட்
(கையொப்பமிடப்பட்டது)
நிறுவனத்தின் செயலாளர்கள்

திகதி : 7ம் திகதி ஆனி 2023

PRIME
RESIDENCIES